மாண்புமிகு பேரவைத் தலைவர்; நோ. உட்காருங்கள். கொளுத் தப்பட்டு விட்டதா என்று கேட்கும் அளவிற்குக் கேட்ட பிறகு மேற் கொண்டு உறுப்பினர் கேள்வி கேட்க நான் அனுமதிக்க விரும்ப வில்லை.

(3) உரிமைப் பிரச்சினைகள்

(அ) 'மக்கள்குரல்' 'தென்னகம்' நாளேடுகள் சபை நடவடிக் கைகளை தவருக வெளியிட்டதாக கூறப்படுவது குறித்து;

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேரவையின் 184-விதியின் கீழ் ''தென்னகம்'' மற்றும் ''மக்கள் குரல்'' பத்திரிகைகளின் மீது அவை உரிமை மீறல் குறித்த அறிக்கைகளைக் கொடுத்துள்ளார். அவற்றை இப்பேரவையில் கொண்டு வர என் அனுமதியை அளிக்கிறேன். திரு. ரகுமான்கான், சுருக்கமாக பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்; மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ், 'மக்கள்குரல்' 'தென்னகம்' ஆகிய பத்திரிகைகளுக்கு எதிராக இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

31-3-1978 அன்று சட்டப்பேரவையில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு, எஸ்.ஆர்.இராதா அவர்கள் பேசும்போது மேலவை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவருக்கு அரசினர் தோட்டத்தில் அரசால் ஒதுக்கப்பட்ட வீட்டில் சட்டமன்ற உறுப் பினர் ரகுமான்கான் இரண்டு ஆண்டுகளாக குடியிருக்கிருர். இதனை பகிரங்க ஊழல், வாடகை மோசடி, கொள்ளை அடிக்கிருர்கள் என்று பேசநான் விரும்பவில்லை. வேறு ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் அவர் இருப்பதைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இதே தவறை ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் செய்திருந் தால் மிகப் பெரியதாக்கி, படம் எடுத்து பூதாகாரமாக்கி இருப் பார்கள். ஆளும் கட்சி உறுப்பினர் ஊழல் என்று பிரசாரம் செய்து இருப்பார்கள், என்றும் சொன்னுர். அதற்கு நான் சட்டப்பேரவை வீதி 81-ன் கீழ் அன்றே தன்னிலை விளக்கம் கொடுத்து இருக் கிறேன். அரசினர் தோட்டத்திலுள்ள 7-ம் எண் வீடு மேலவை உறுப்பினர் திரு. திராவிடமணிக்காக சட்டபூர்வமாக ஒதுக்கப் பட்டது. அந்த வீட்டிற்கான வாடகையையும் மின்சாரக்கட்டணத் தையும் திரு. திராவிட மணி தான் செலுத்துகிருர். அவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் எனக்கு உள்வாடகைக்கு அவர் விட்டு இருந்தால் அது சட்டவிரோதம். திரு. திராவிடமணி எங்கள் கட்சியை சேர்ந்தவர். என்னுடைய குடும்ப நண்பர் அவரோடு தற்காலிகமாக அவருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் வீட்டில் நான்

1978 ஏப்ரல் 5] (திரு. ஏ. ரகுமான்கான்)

வசித்து வருகிறேன், இது சட்டவிதிகளுக்குப் புறம்பானது அல்ல: சாதாரண நடைமுறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கும் சட்டமன்ற விடுதி அறைகளில், ஆளும் கட்சியை சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் அறைகளில், சட்டமன்றஉறுப்பினர்களைத் தவிர வெளியார்களும் தங்கி இருப்பது நடைமுறையாக இருக்கிறது. அதேபோல் நம்முடைய இன்றைய அமைச்சர் ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, கோஷன் பிளாக்கில் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த 5 ம் எண இல்லத்தில் ......

திரு. எஸ். ஆர். இராதா; பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

திரு. ஏ. ரகுமான்கான்; நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை; நடைமுறையைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பத்திரிக்கையில் வராதவைகளுக்கு விளக்கம் தரவேண்டுமே தவிர, சம்பந்தப்படாத நிகழ்ச்சிகளை இங்கே பேசிக்கொண்டு இருக்க கூடாது. நான் அவைகளை நீக்க வேண்டி வரும். தயவுசெய்து தாங்கள் கொண்டு வந்துள்ள உரிமைப்பிரச்னை மீது மட்டும் பேசுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. தன்னிலை விளக்கம் தான் கொடுத்துக்கொண்டு போகிறேன். இப்படியெல்லாம் நடைமுறையில் இருந்து இருக்கின்றன ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு.ரகுமான்கான், பத்திரிக்கையில் தாங்கள் பேசியது வரவில்லை என்று காரணம் காட்டி பேசுங்கள், அதை விட்டு, வேறு என்னவோ சொல்கிறீர்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள். நீங்கள் பிரச்னையின் உள்ளே போய்க்கொண்டு இருக்கிறீர்கள். முடித்துவிடுங்கள், இல்லையென்றால் நீக்க வேண்டி வரும்.

திரு. ஏ. ரகுமான்கான்; Much obliged S r, நண்பர் எஸ் ஆர்.இராதா அவர்கள்வேறுஒருவருக்கு ஒதுக்கிய வீட்டில் ரகுமான் கான் குடியிருப்பது ஊழல் என்று குறிப்பிட்டுத் தெளிவாகச் சொல்லவில்லை. அப்படியிருக்கும்போது, ''மக்கள்குரல்'' பத்திரிகை 30-3-1978 தேதிய ''மக்கள் குரல்'' பத்திரிசை, ''சட்டசபையில் தி.மு.க,எம்.எல்.ஏ. மீது புகார், வேறு ஒருவருக்கு ஒதுக்கிய வீட்டில் ரகுமான்கான் குடியிருப்பது ஊழல் இல்லையா?'' என்று தலைப்பிட்டும் அப்படி உறுப்பினர் எஸ்.ஆர்,இராதா பேசியதாகவும் செய்தி வெளியிட்டு இருக்கிறது. உறுப்பினர் எஸ்,ஆர்.இராதா வேறு ஒருவருக்கு ஒதுக்கிய வீட்டில் குடியிருப்பது ஊழல் என்று குறிப்பிட்டுப் பேசவே இல்லை, தெளிவாக இப்படிப் பட்ட குற்றச்சாட்டு சொல்லவே இல்லை,ஆனல் 'மக்கள் குரல்' பத்திரிக்கையில் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு மக்கள்

மத்தியில் ஒரு ஊழல் பேர்வழி என்ற எண்ணம் என்மீது ஏற்பட வேண்டுமென்ற முறையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இது உரிமை மீறிய செயல்.

அதைப்போல 30-3-1978 'தென்னகம்' பத்திரிக்கையில் 'எஸ்.ஆர். இராதா குற்றச்சாட்டு, சட்டசபையில் பரபரப்பு' என்று வெளியிடப்பட்டிருக்கிறது. மக்கள் மத்தியில் தவருன எண்ணம் ஏற்படும் வகையில் உள்நோக்கத்தோடு இம்மாதிரி வெளியிடப்பட்டிருக்கிறது. இதுவும் உரிமை மீறிய செயல். ஆகையால் இதை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இது பற்றிய என்னுடைய தீர்ப்பை பின்னல் அறிவிக்கிறேன்.

(3) உரிமைப்பிரச்னைகள்—தொடர்ச்சி

* (ஆ) திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களுடைய குற்றச் சாட்டுக்களை மட்டும் முரசொலி நாளேடு வெளியிட்டுவிட்டு அரசு தரப்பில் கூறப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்து திரு.எஸ்.ஆர். இராதா அவர்கள் 'முரசொலி, நாளேட்டின் மீது ஒரு அவை யுரிமை மீறல் பிரச்னையை கொடுத்திருக்கிருர்கள், அதை அவை யில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

<u>திரு. எஸ்.ஆர். இராதா:</u> தலைவரவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 184-ன்கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்க்கண்ட பிரச்சனையை அவையில் எழுப்ப தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

தற்போது நடைபெற்று வரும் பேரவைக் கூட்டத்தொடரில் பிரதான எதிர்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக உறுப் பினர்கள் சிலர் தமிழக அரசின் மீதும் மாண்புமிகு அமைச்சர் கள் மீதும் சில குற்றச்சாட்டுகளை பேரவை விவாதத்தின்போது எழுப்பிஞர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு அமைச் சர்கள் தகுந்த ஆதாரத்துடன் மறுப்புகளை பேரவையில் கொடுத் துள்ளார்கள். ஆனல் முரசொலி நாள் ஏட்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கள் மட்டுமே வெளியிடப் பட்டுள்ளன; அவற்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அளித்த ஆதாரத்துடன் கூடிய மறுப்புகள் வெளியிடப்படவில்லை. உதாரணத்திற்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளைப் பற்றி அவையிலே குறிப்பிட விரும்புகிறேன்.